## TAMILNADU POLLUTION CONTROL BOARD

**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE ENVIRONMENTAL CLEARANCE FROM MINISTRY OF ENVIRONMENT, FOREST & CLIMATE CHANGE BY KODANGIPALAYAM CLUSTER – C FOR THE PROPOSED QUARRY PROJECT OF 9.18.89 HECTARE LOCATED AT S.F. NOS. 314/1A(P), 1(B), 324/2B, 324/2C, 311/2(P), 304/1, 308/3, 315/2A3B1, 320/2B2 AND 324/2A,, KODANGIPALAYAM VILLAGE, PALLADAM TALUK, TIRUPPUR DISTRICT, HELD ON 17.02.2021 FROM 12.45 PM TO 1.15 PM IN SRI VENKATESHWARA MAHAL, TRICHY MAIN ROAD, KARANAMPET, PALLADAM TALUK, TIRUPPUR DISTRICT.**

**Present:**

| | | |
|---|---|---|
| 1 | Dr. K. Vijayakarthikeyan, I.A.S. | District Collector,<br>Tiruppur District,<br>Tiruppur |
| 2 | Er. V. Swaminathan | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 3 | Er. C. Vanaja | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 4 | Dr. S. Vediappan | Deputy Director,<br>Geology & Mining,<br>Tiruppur District |
| 5 | Project Proponents (5 Nos.) | Annexure - I enclosed |
| 6 | Thiru. Thangaraj | EIA Consultant,<br>Geo Exploration and Mining Solution,<br>Salem. |
| 7 | Public | 42 Nos. (Annexure - II enclosed) |

It was proposed to conduct public hearing for the proposed Kodangipalayam Cluster – C consisting of SF. No. 314/1A(P), 1(B), 324/2B, 324/2C, 311/2(P), 304/1, 308/3, 315/2A3B1, 320/2B2 and 324/2A, Kodangipalayam village, Palladam Taluk, Tiruppur District to an extent of 9.18.89 Ha on 12.02.2021. Due to administrative reasons, the proposed public hearing was postponed to 17.02.2021 by the District collector, Tiruppur which

was widely advertised in the local daily (a copy of the press release dated 12.02.2021 is enclosed vide annexure – III). A display board was also placed before the said hall (Sri Venkateshwa Mahal, Palladam Road, Karanampet, Palladam Taluk, Tiruppur District) about the postponement of the public Hearing (annexure – IV enclosed).

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruppur South.**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruppur South has welcomed the District Collector, Tiruppur, General Public, Environmentalist and other Government Officials in the public hearing meeting conducted on 17.02.2021 for the proposed cluster quarry project M/s. Kodangipalayam Cluster - C, over an extent of 9.18.89 ha, Kodangipalayam Village, Palladam Taluk, Tiruppur District. He also said that the public hearing is to be conducted for the establishment of certain industries attracting the EIA notification, 2006 as amended, issued under the Environment (Protection) Act, 1986. He has also requested the public present in the meeting to air their views regarding their opinion, doubts, apprehensions and suggestions about the proposed new project.

Further, the District Environmental Engineer, Tiruppur South has stated that Thiru. D. Thangaraj, EIA Consultant, Geo Exploration and Mining Solution, Salem will explain about the proposed project and Environmental Impact Assessment report through power point presentation and followed with the public can express their views, suggestions and comments on the said project and also he stated that the queries of the public's will be clarified by the project proponent.

Accordingly Thiru. D. Thangaraj, EIA Consultant, Geo Exploration and Mining Solution, Salem welcomed the District Collector, District Environmental Engineer, District Officials, Public and briefed about the proposed 5 Nos. of quarries and existing 3 Nos. of quarries in the M/s. Kodangipalayam Cluster - C project by power point presentation. After his explanation, District Environmental Engineer invited comments from the public through written or oral.

Accordingly, the following village people have raised some comments in the public hearing meeting. The views and suggestions of the public are detailed as below.

**PUBLIC VIEWS:**

**1. Thiru. V. Palanisamy, President – Kodangipalayam Village Panchayat.**

He once again welcomed the District Collector, the officers of Geology and Mining, and others. He has expressed his view as follows.

- He has appreciated the works carried out in the Kodangipalayam Cluster – C and also informed that the Hon'ble Minister, Member of Legislative Assembly (MLA) and the District Collector, Tiruppur had visited the Amma Mini Clinic last month. He also told that 15 days prior to opening of the mini clinic, the Government will give all the medical apparatus, medicines, doctors and nurses. However the building allotted for mini clinic is to be renovated since it was an old building. The project proponents of Quarry/Stone Crusher of Kodangipalayam Cluster – C has contributed Rs.6.0 Lakhs out of Rs.7.0 Lakhs for the renovation of the old mini clinic and hence the renovation works were completed within 15 days and with the guidance of the District Collector and with a support of the Hon'ble Minister, Member of Legislative Assembly it was completed.
- In chinakodangipalayam area, there is no main road facility from Arakkulam junction to Kodangipalayam till now. To reach mother village Kodangipalayam from Kodangipalayam junction, it takes 2Km, and hence the two ways to reach Kodangipalayam village from Lakshmi Mills via Rasagoundanpalayam and from Somanur – Perumagoundampalayam junction.
- A Kuttai in Vadugan Thottam was present on the way to Kodangipalayam from Arakkulam Junction and the Kuttai was already constructed before 30 – 40 years adjoining the nearby the mud road. One Mr. Velusamy in this cluster has donated his own land for laying the road. Also the materials like jelly and sand were supplied by the project proponents to complete the construction of the road. From District Mineral fund, the road for a distance of 1km was laid now to go to mother village of kodangipalayam and to panchayat office from Trichy road.

- An abandoned quarry was there in that area. By that time, as much of the garbage was collected in the panchayat and the construction demolished waste was also dumped in the odais, it was asked by the panchayat to dump the waste in the abandoned quarry, and now three forth of the abandoned quarry was dumped with the waste for the past 4-5 years, the abandoned quarries are also becoming useful, and it is because of these project proponents.
- In Chinakodangipalayam there is an youth club called 'Izhanthalir Narpani Mandram' and to conduct public programmes like government functions, temple functions and pongal festivals in a common stage, when it was asked to the project proponents they assured to construct the same.
- This Cluster is supporting to the panchayat, to the public, to the district administration and to the government and the request is fulfilled by the project proponents.

**2. Thiru. Sivasamy – Farmer – Kodangipalayam Village**

He welcomed the District Collector, the public, the sisters and brothers and registered his views as follows.

- If the economic development of the people is to be improved, there shall be cash flow among the people for which in turn the people shall have good business. When this part was dry in agriculture and power looms were slowly upcoming, these quarries are very supportive to this area. There after the Karanampet and Kodangipalayam villages came out to the public and to help the public.
- The labours are majority from other districts and other states are working, the construction of houses by them in these areas involve huge amount. But as quarries are nearby and the quarry owners are supportive, this part has been developed and many houses have come.
- The quarry owners are carrying tree plantation and the Environment protection works.
- Many of the vacant lands in road side around Karanampet, Kodangipalayam and surrounding areas opened with shops for the cotton shops, grocery shops, spare parts shops and the labourers are benefitted indirectly in a known fact.

- As the employment for labourers and educated youth id being improved requested the District Collector to help for the growth of these quarries.
- Small damages and accidents may happen to the two wheelers in Karanampet Naal road when the trucks are turning with jelly and gravel. When these defects are rectified, this area will be clean.

**3. Thiru. R. Subramanian – The former President - Kodangipalayam Village Panchayat.**

He welcomed the gathering and desired to express his view as below.

- As there are 200 to 300 Lorries are travelling trough Karanampettai to Kodangipalayam and Chinakodangipalayam to Rasagoundanpalayam, the project proponents may insist the drivers to operate safely in the monthly meeting.
- The president of Kodangipalayam panchayat was requested to provide a speed breaker near the Sivan Sakthi vinayagar Kovil in chinakodangipalayam in order to slow down the lorry operations.
- He requested the quarry association to instruct the lorry drivers to go slow and not to overtake within village.
- He said that he met with a small accident two days back though nothing happened however and the lorry crossed at least ½ km in a short span of time. He has not informed to the project proponents so for and requested to provide a speed breaker and to advise the lorry operators.

On behalf of the District collector, Tiruppur and Tamilnadu Pollution Control Board, the District Environmental Engineer, thanked all the public who have participated in this meeting.

The proceedings of the meeting were video graphed and recorded in CD which is enclosed.

District Environmental Engineer
TNPC Board, Tiruppur South

District Collector
Tiruppur

3/4

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**17.02.2021 அன்று 12.45 மணி முதல் 1.15 மணி வரை, திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், காரணம்பேட்டை, திருச்சி பிரதான சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா மஹாலில், நடைபெற்ற தி/ள் கோடங்கிபாளையம் குழுமம் - C நிறுவனத்தின் உத்தேசிக்கப்பட்ட குவாரிகள் (புல எண் 314/1A(P), 1(B), 324/2B, 324/2C, 311/2(P), 304/1, 308/3, 315/2A3B1, 320/2B2 மற்றும் 324/2A பரப்பு 9.18.89 ஹெக்டர், கோடங்கியாளையம் கிராமம், பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்) திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

பங்கேற்றோர்

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர். க. விஜயகார்த்திகேயன்<br>இந்திய ஆட்சிப் பணி. | மாவட்ட ஆட்சியர்,<br>திருப்பூர் மாவட்டம், திருப்பூர். |
| 2. | திரு. வ. சுவாமிநாதன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 4. | திருமதி. செ. வனஜா | உதவி சுற்றுச்சுழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 5. | டாக்டர் எஸ். வெடியப்பன் | துணை இயக்குனர், புவியியல் மற்றும் சுரங்க துறை, திருப்பூர் மாவட்டம். |
| 6. | திட்ட உரிமையாளர்கள் - (5 Nos.) | இணைப்பு - I ல் உள்ளபடி |
| 7. | திரு.பெ. தங்கராஜ் | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர்,<br>புவி-ஆய்வு மற்றும் சுரங்க தீர்வு, சேலம் மாவட்டம். |
| 8. | பொது மக்கள் | 42 Nos. (இணைப்பு - II ல் உள்ளபடி) |

கோடங்கிபாளையம் குழுமம் - C குவாரிக்களுக்கான (புல எண். 314/1A(P), 1(B), 324/2B, 324/2C, 311/2(P), 304/1, 308/3, 315/2A3B1, 320/2B2 மற்றும் 324/2A, பரப்பு 9.18.89 ஹெக்டர், கோடங்கிபாளையம் கிராமம், பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்) பொது மக்களின் கருத்துக்கேட்பு கூட்டம் முன்பே அறிவித்தப்படி 12.02.2021 அன்று நடைபெறுவதாக இருந்தது, சில நிர்வாக காரணங்களால், இந்த

பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர், திருப்பூர், அவர்களால் ஒத்திவைக்கப்பட்டது. இந்த தகவல் உள்ளூர் நாளிதழிலும் அறிவிக்கப்பட்டது (12.02.2021 அன்று வெளிவந்த பத்திரிக்கை செய்தியின் நகல் இணைப்பு - III –ல் இணைக்கப்பட்டுள்ளது). மேலும் ஒத்திவைப்பு அறிவிப்பு குறித்த பதாகையும் ஏற்கனவே கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த கூட்ட அரங்கிற்கு முன்பாக (ஸ்ரீ வெங்கடேஷ்வரா மஹால், காரணம்பேட்டை, பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்) வைக்கப்பட்டது (நகல் இணைப்பு - IV - ல் இணைக்கப்பட்டுள்ளது ).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் தெற்கு**

கூட்டத்தின் துவக்கத்தில், மாவட்ட சுற்றுச்சுழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் (தெற்கு) அவர்கள், கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்த மாவட்ட ஆட்சியர் திருப்பூர், அரசு அதிகாரிகள், நிறுவனத்தின் பிரதிநிதிகள், சுற்றுச்சுழல் ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்களை வரவேற்றார். பின்னர் அவர் 2006 சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் கீழ் குறிப்பிட்ட சில தொழில் நிறுவனங்கள் துவக்க பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனக் கூறினார்.

திட்டத்திற்கான விளக்க உரையை திரு. பெ. தங்கராஜ், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், புவி ஆய்வு மற்றும் சுரங்க தீர்வு, சேலம் மாவட்டம் அவர்கள் விளக்கிய பின்பு பொது மக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பார்வை, கருத்து, சந்தேகங்கள், பாராட்டுக்கள் மற்றும் யோசனைகளை பொதுமக்கள் இக்கூட்டத்தில் பதிவு செய்யலாம் என்று கூறினார்.

**1. திரு. V. பழனிசாமி – ஊராட்சி மன்ற தலைவர் - கோடங்கிபாளையம் கிராமம்.**

இவர், மீண்டும் மாவட்ட ஆட்சியர், கணிம வள அதிகாரிகள் மற்றும் ஏனையோர்களுக்கு வணக்கம் தெரிவித்து கொண்டு தனது கருத்துக்களை கீழ்கண்டவாறு பதிவு செய்தார்.

- கோடங்கிபாளையம் கிளஸ்டர் - C பொருத்தமட்டில் மிக அற்புதமாக பணிகளை செய்திருக்கிறார்கள் எனவும். அம்மா மினி கிளினிக்கு முந்தைய மாதம் மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் (ம) மாவட்ட ஆட்சியர் வருகை புரிந்திருந்தார்கள் என்று கூறினார். அந்த மினி

கிளினிக் திறக்க 15 நாட்கள் இருந்த நிலையில், மருத்துவ உபகரணங்கள், மருந்து மற்றும் மருத்துவர் செவிலியர் ஆகியோரை அரசே வழங்கிவிடும் எனவும், ஆனால் மினி கிளினிக் திறக்க இருந்த கட்டிடம் மிகவும் பழமையானதாக இருந்ததாலும், அதை புதுப்பிக்க சுமார் 7 இலட்சம் ரூபாய் தேவைப் பட்ட நிலையில் C கிளஸ்டரில் உள்ள குவாரி/கிரஷர்களின் உரிமையாளர்கள் 6 இலட்சம் ரூபாய் மனமுவந்து வழங்கினார்கள் எனவும், அதனால் அந்த மினி கிளினிக்கை பதினைந்தே நாட்களில் இந்த ஊராட்சிக்கு திறந்து வைக்கப்பட்டது எனவும். மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படியும் மாண்புமிகு அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவோடும் நிறைவேற்றபட்டது என்று கூறினார்.

- இந்த சின்ன கோடங்கிபாளைம் பகுதியில் ஆறாக்குளம் பிரிவில் இருந்து கோடங்கிபாளையம் செல்வதற்கு இவ்வளவு காலமாக மெயின் ரோடு இல்லை எனவும், தாய் கிராமம் கோடங்கிபாளையத்திற்கு கோடங்கிபாளையம் பிரிவிலிருந்து செல்ல 2 கிலோ மீட்டர் ஆவதாகவும், லட்சுமி மில்லிருந்து ராசாக்கவுண்டன்பாளையம் வழியாக கோடங்கிபாளையம் செல்ல வேண்டும் எனவும், சோமனூர் ரோடு பெருமாக்கவுண்டன்பாளையம் பிரிவிலிருந்தும் செல்ல வேண்டும் என்று கூறினார்.
- ஆராக்குளம் பிரிவில் இருந்து கோடங்கிபாளையம் செல்லும் வழியில் ஒரு குட்டை இருந்ததாகவும் (வடுகன் தோட்டம்) அதில் ஏற்கனவே இருந்த மண் பாதையையும் சேர்த்து 30, 40 ஆண்டுகளுக்கு முன்பே குட்டை கட்டி விட்டனர் எனவும், இந்த கிரஷ்சரில் இருக்க கூடிய வேலுச்சாமி என்பவர்தான் தன் சொந்த இடத்தை பஞ்சாயத்திற்கு கொடுத்து ரோடு போட்டுகக்கொள்ள கொடுத்தா எனவும். மேலும் அந்த பகுதியில் இருக்க கூடிய தொழில் அதிபர்கள் மண், கல் என பொருட்கள் நிறைய கொடுத்து அந்த பாதையை முடித்துக்கொடுத்தனர் எனவும் கூறினார். கனிம வள நிதியின் மூலமாக தார்சாலை அமைத்து இப்பொழுது ஒரே கிலோ மீட்டரில் தாய் கிராமம் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு திருச்சி சாலையில் இருந்து செல்ல கூடிய அளவில் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்.
- ,அந்த பகுதியில் ஒரு கல் குவாரி இருந்ததாகவும், அந்த குவாரி கைவிடப்பட்டுவிட்டதாகவும், ஊராட்சி குப்பை கூலங்கள் நிறைய சேதாரமாகிறது எனவும், கட்டிடம் உடைக்கும் கட்டிட கழிவகள் ஒடைகளில் கொட்டப்ட்டுக் கொண்டிருந்ததாகவும் அப்பொழுது அந்த கைவிடப்பட்ட கல்

குவாரியை ஊராட்சிக்கு தேவையில்லாத குப்பைகளை கொட்ட எழுதிக்கேட்டதாகவும், தற்பொழுது 4, 5 ஆண்டுகளாக அந்த குவாரியின் முக்கால் பகுதி குப்பைகள் கொட்டப்பட்டு வருவதாகவும். இது போன்ற கைவிடப்பட்ட கல்குவாரிகள் கூட ஆக்கபூர்வமான பணிகளுக்கு பயன்படுத்தப் படுவதற்கு இந்த கிளஸ்டரில் உள்ளவர்கள் தான் மனமுவந்து உதவிகள் செய்கிறார்கள் என்று கூறினார்.

- சின்ன கோடங்கிபாளையத்தில் “இளந்தளிர் நற்பணி மன்றம் என்ற பொது அமைப்பு உள்ளது எனவும் அந்த அமைப்பிற்கான கட்டிடம் மற்றும் பொது விழா மேடை, அரசு விழாக்கள், கோவில் விழாக்கள் மற்றும் தை பொங்கல் விழாக்கள் நடத்த விழா மேடை தேவைப்பட்டது எனவும், அதை இந்த கிளஸ்டரில் உள்ளவர்களிடம் கேட்டபோது கட்டித்தருகிறோம் என்று உறுதி அளித்திருக்கிறார்கள் என்றும் கூறினார்.
- இந்த கிளஸ்டரை பொருத்த மட்டிலும் ஊராட்சி மன்றத்திற்கும், பொது மக்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும், நமது அரசிற்கும் அவர்கள் ஆதரவாகவே இருக்கிறார்கள், கேட்பனவற்றையெல்லாம் செய்து கொடுக்கிறார்கள் என்றும் கூறி முடித்தார்.

**2. திரு. சிவசாமி – விவசாயி – கோடங்கிபாளையம் கிராமம்.**

இவர் மாவட்ட ஆட்சியருக்கும், பொது மக்களுக்கும், சகோதர, சகோதரிகளுக்கும் தன்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு தனது கருத்துக்களை கீழ்கண்டவாறு பதிவு செய்தார்.

- ஒரு பகுதியில் மக்களுடைய மேம்பாடு பொருளாதார ரீதியாக வளர வேண்டுமானால் அந்த மக்களிடையே பணப்புழக்கம் வரவேண்டும் எனவும், பணம் புழக்கம் வேண்டுமானால் தொழில் வேண்டும் எனவும் விவசாயத்தில் இந்த பகுதி வரட்சியான பகுதியாக இருந்த காலகட்டத்தில் மெல்ல விசைத்தறி இயங்கிகொண்டிருந்த போது அதற்கு மிகப்பெரிய துணையாக இந்த வறட்சி பகுதியில் கல்குவாரிகள் வந்த பின்புதான் காரணம்பேட்டை மற்றும் கோடங்கிபாளையம் என்பது வெளி உலகிற்கு மிக மிக பரிட்சயமான ஒன்றாகவும், மக்களுக்கு உதவி செய்கின்ற ஒன்றாகவும் தெரிய வந்தது என்று கூறினார்.
- இங்கே வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநில தொழிலாளர்கள் எல்லோரும் வந்து பணி செய்கின்ற காரணத்தால், அவர்கள் ஒன்றிரண்டு செண்ட் இடங்கள் வாங்கி வீடு கட்டுவதற்கு நிறைய பொருட் செலவுகள் ஆகும் எனவும், ஆனால் கல் குவாரிகள் அருகில் இருப்பதனாலும், கல்

குவாரி உரிமையாளர்கள் உறுதுணையாக இருப்பதாலும், இப்பகுதி மிகப்பெரிய வளர்ச்சியை எட்டி, இங்கு நிறைய வீடுகள் கிடைத்துள்ளன எனவும் கூறினார்.

- கல் குவாரி உரிமையாளர்கள் மரம் வளர்ப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு பணிகள் செய்கின்றனர் என்றும் கூறினார்.
- காரணம்பேட்டை, கோடங்கிபாளையம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் ரோட்டு ஒரங்களில் இருந்த நிலங்களில் தற்போது நில வாடகைக்கு பஞ்சு கடை, மளிகை கடை, உதிரிபாக கடைகள் வைக்கிறார்கள் எனவும், அந்த தொழிலாளர்கள் மறைமுகமாக நிறைய பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் அனைவருக்கும் தெரிந்த ஒன்று என்றும் கூறினார்.
- இதனால் தொழிலாளர்கள், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் எல்லாம் கூடி வருகின்ற காரணத்தினால், இந்த தொழில் மேண்மேலும் வளர மாவட்ட ஆட்சிதலைவர் அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் கூறினார்.
- மேலும் காரணம்பேட்டை நால்ரோட்டில் லாரிகள் திரும்பும்போது, மண் மற்றும் கற்கள் கீழே விழுவதால் இரு சக்கர வாகனத்தில் செல்பவர்களுக்கு பாதிப்பும், சிறு விபத்துகள் ஏற்படவும் வாய்ப்புள்ளதாகவும் கூறினார். இந்த குறைகளை நிவர்த்தி செய்யும் பட்சத்தில் வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்கள் பார்வைக்கு இவ்விடம் சுத்தமாக இருக்கும் என்று கூறி முடித்தார்.

**3. திரு. R. சுப்பிரமணியன் - முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் - கோடங்கிபாளையம் கிராமம்**

இவர் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துக்கொண்டு இத்தருணத்தில் ஒன்றை மட்டும் பதிவு செய்ய உள்ளதாக கூறினார்.

- அது என்னவென்றால் காராணம்பேட்டை முதல் கோடங்கிபாளையம் வரை மற்றும் சின்ன கோடங்கிபாளையம் முதல் இராசாக்கவுண்டன்பாளையம் வழியாக 200 முதல் 300 வரையிலான லாரிகள் சென்று வருகின்றன என்றும், உரிமையாளர்கள் லாரி ஓட்டுனர்களிடம் கவனத்துடன் மெதுவாக ஓட்டிச்செல்லுமாறு மாதாந்திர கூட்டத்தில் கேட்டுக்கொள்வதாகவும் கூறினார்.
- வெளிமாநிலம் மற்றும் வெளியூர் ஓட்டுனர்கள் மெதுவாக செல்லும் வகையில், கோடங்கிபாளையம் ஊராட்சிமன்ற தலைவர் பொறுப்பேற்று

சின்ன கோடங்கிபாளையம் அருகில் சிவன் சக்தி விநாயகர் கோவில் அருகே ஒரு வேகத்தடை அமைத்து லாரி ஓட்டுனர்களை மெதுவாக செல்ல வேண்டும் அறிவுறுத்தும்படி கூறினார்.

- லாரி ஓட்டுனர்களிடம் மெதுவாக செல்லுமாறும் ஊர்களுக்குள்ளே செல்லும்போது முந்தி செல்லாமல் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட வேண்டும் என கல் குவாரி சங்க தலைவர்களிடம் கேட்டுக்கொண்டார்.
- தான் இரு சக்கர வாகனத்தில் இரண்டுநாட்களுக்கு முன்பு சாலையில் சென்ற போது இந்த லாரிகளால் சிறிய விபத்து ஏற்பட்டதாகவும், திரும்பி பார்ப்பதற்குள் அந்த லாரி ½ கிலோ மீட்டர் தூரம் சென்றுவிட்டதாகவும் தனக்கு ஒன்றும் நடைபெறவில்லை எனவும் இதை தான் உரிமையாளர்களிடம் தெரிவிக்கவில்லை என்றும் கூறிக்கொண்டு இது போன்று இனி வரும் காலங்களில் நடக்காமல் இருக்க வேகத்தடை அமைக்குமாறும் லாரி ஓட்டுனர்களிடம் அறிவுறுத்துமாறு மீண்டும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்த பின், இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் சார்பாக கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டத்தை முடித்து வைத்தார்.

கூட்ட நிகழ்வை காணொலி காட்சியாக "பதிவு செய்யப்பட்டு" குறுந்தகட்டில் பதிவு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
திருப்பூர் தெற்கு

மாவட்ட ஆட்சியர்
திருப்பூர் மாவட்டம்